யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 270

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்:
[கி-2127]

## விமானத்தளத் தாக்குதலுக்கு விமானப் படையே முழுப் பொறுப்பு

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதும் விமானப் படைத்தளம் மீதும் விடுதலைப்புலிகள்மேற்கொண்ட தாக்குதலுக்கு விமானப் படையினரே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா கூறியுள்ளார்;

ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே மேற்படி குற்றச்சாட்டைவிமானப் படையினர் மீது ஜனாதிபதி சுமத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கட்டுநாயக்கா விமான நிலையம் மீதுமேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் நாடு பெரும் பொருளாதார பின்னடைவை எதிர் நோக்கியுள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்படவும் வகுத்துள்ளது.

இந்த நிலையிலிருந்து நாடு மீட்சி பெற வேண்டுமாயின் ஒரு வருடத்திற்கு மேலதிகமான சம்பள அதிகரிப்பு மற்

(8ம் பக்கம் பார்க்க)

## 28 அம்சங்கள் அடங்கிய கூட்டறிக்கை வெளியாகியது

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே, வி.பி)க்குமிடையில் கைச்சாதிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் 28 அம்சங்கள் அடங்கிய கூட்டறிக்கை ஒன்றினை அரசும், ஜே.வி.பி யும் நேற்று வெளியிட்டுள்ளது.

இக் கூட்டறிக்கையின் இருபதாவது அம்சத்தில்;

ஒரு வருட காலத்திற்குள் எந்தவிதமான அதிகாரப் பரவலாக்கலும் மேற்கொள்ளக் கூடாதெனவும், தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு வந்தால்தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகைக்கான செலவீனத்தைக் குறைத்தல், உணவுப்பொருட்களின்விலையைக்குறைத்தல், அமைச்சர்கள், எம்.பி. களுக்கான வாகனச் செலவுகளைக் குறைத்தல், அமைச்சர்கள், எம்.பி. களின்வெளிநாட்டுப் பயணங்களைக் குறைத்தல் உட்பட பலவிடயங்கள் நிபந்தனைகளாக கூட்டறிக்கையில் இடம்பெற்றுள்ளது. (வ)

## உடன்படிக்கை கைச்சாத்தாகி 24மணி நேரத்திற்குள் பொ.ஐ.ஐ.முன்னணி-ஜே.வி.பிக்குள் "சொற்பதத்தில்" கருத்து முரண்பாடு

### புலிகளுடன் அரசு பேசுவதும் அவதானிக்கப்படுமாம்

(நமது நிருபர்)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) க்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 24 மணி நேரத்திற்குள் இரு தரப்பினர் மத்தியிலும் முரண்பட்ட கருத்துக்கள் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேச்சடிபடுகிறது.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில்தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே இரு சாராருக்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி யும் உடன்பாடு ஒன்றுக்கு வந்த பின் இருசாராருக்குமிடையே

சிறிபாலடி சில்வா ஆகியோர்நேற்று பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை நடத்தி பொதுஜன

பெறவில்லையென்றும் இப்பதத்தை செய்தி ஊடகங்களே பயன்படுத்தி வந்ததாகவும், தற்போதும்

## ஒப்பந்தத்தை மீறினால் செல்லுபடியற்றதாகி விடும்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசும் மக்கள் விடுதலை முன்னணியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எந்த கட்சியாவது மீறினால் அவ் உடன்படிக்கை செல்லுபடியற்றதாகி விடும்: இதற்கமையவே இவ் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டுள்ளது என மக்கள்

திருமணச்சட்ட மூலதிருத்தத்தின் மீதான விவாதங்கள் பாராளுமன்றில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவிக்கையில், உத்தேச ஆணைக் குழு தொடர்பான பிரேரணையை இம்மாதம் 24ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் இணக்கம்

பொது ஜன ஐக்கிய முன்
னணியும், ஜே. வி: பி யும்
உடன்பாடு ஒன்றுக்கு வந்த
பின் இருசாராருக்குமிடையே
புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்
சாத்தாகியது:
புரிந்துணர்வு ஒப்பந்தம்
கைச்சாத்தானதை அடுத்து
பொது ஜன ஐக்கிய முன்
னணி அரசின் பிரதான அங்க
மான சிறிலங்கா சுதந்திரக்
கட்சியின் அமைச்சர்களான
மங்கள சமரவீர, நிமால்
சிறிபாலடி சில்வா ஆகி
யோர்நேற்று பத்திரி
கையாளர் மகா நாடு
ஒன்றை நடத்தி பொதுஜன
ஐக்கிய முன்னணி அரசிற்கும்
ஜே. வி. பிக்குமிடையிலான
புரிந்துணர்வு ஒப்பந்தம் பற்
றிய கருத்துக்களை அவர்கள்
வெளியிட்டிருந்தனர்:
இப்பத்திரிகையாளர் மகா
நாட்டில், புரிந்துணர்வு ஒப்
பந்தத்தில் ''தகுதிகாண்
அரசு'' என்ற பதம் இடம்
பெறவில்லையென்றும் இப்
பதத்தை செய்தி ஊடகங்
களே பயன்படுத்தி வந்ததா
கவும், தற்போதும் பயன்
படுத்தி வருவதாகவும் குற்றம்
[8ஆம் பக்கம் பார்க்க]

படிக்கை செல்லுபடியற்ற
தாகி விடும்: இதற்கமையவே
இவ் ஒப்பந்தம் கைச்சாத்
திடப்பட்டுள்ளது என மக்கள்
விடுதலை முன்னணியின் பிர
சார செயலர் விமல் வீரவன்ச
தெரிவித்துள்ளார்:

தொடர்பான பிரேரணை
யை இம்மாதம் 24ம் திக
திக்கு முன்னர் சமர்ப்பிப்
பதற்கு அரசாங்கம் இணக்கம்
தெரிவித்துள்ள அதே நேரம்
ஊடக ஆணைக்குழுவை
(8ம் பக்கம் பார்க்க)

# பொ. ஜ. ஐ. முன்னணி அரசாங்கம் ஜே. வி. பியின் கைதியாகவுள்ளது

## ஜோன் அமரதுங்கா எம்.பி. ஏளனம்

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்
னணி அரசும் ஜே; வி; பி யும்
செய்து கொண்ட புரிந்து
ணர்வு ஒப்பந்தத்திற்கமைய
தற்போதைய அரசுநன் நடத்
தை அரசாங்கமாகவே இருக்
கின்றது. அரசின் நன் நடத்
தையை ஜே; வி. பியின் பிர
சார செயலாளரான விமல்
வீரவன்ச உன்னிப்பாக
கவனித்து கொண்டே இருக்
கின்றார்;
இவ் வாறு ஐக்கிய தேசிய
கட்சியின் பாராளுமன்றஉறுப்
பினரானஜோன் அமரதுங்கா
அரசாங்கத்தை ஏளனம் செய்
(8ம் பக்கம் பார்க்க)

# ஜே. வி. பி - அரசு கூட்டு தமிழ்க் கட்சிகள் ஆராயும்

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்
னணி அரசிற்கும் மக்கள் விடு
தலை முன்னணிக்கும் இடை
யில் ஏற்பட்டுள்ள புரிந்து
ணர்வு உடன்படிக்கையை
அடுத்து தமிழ்க்கட்சிப் பாரா
ளுமன்ற உறுப்பினர்கள்அடுத்
தவாரமளவில் கூடி ஆராய
வுள்ளனர்
பொதுஜனஐக்கிய முன்
னணி அரசிற்கு எதிராக
ஐக்கியதேசியக் கட்சியுடன்
இணைந்து பலஎதிர்ப்பு நட
வடிக்கைகளை தமிழ்க்கட்சிப்
பாராளுமன்ற உறுப்பினர்கள்
நடத்தி யிருந்தமையுடன்
அரசுமீதுஐக்கியதேசியக்கட்சி
கொண்டுவந்த நம்பிக்கையில்
[8ஆம் பக்கம் பார்க்க]

# ஜே. வி. பியுடனான ஒப்பந்தம் சமாதான முயற்சியை பாதிக்காது

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்
னணி அரசு - ஜே.வி.பியு
டன் கூட்டுச்சேர்ந்து செய்து
கொள்ளப்பட்ட உடன்ப
டிக்கை நோர்வேயின் சமா
தான முயற்சியை எந்தவிதத்
திலும் பாதிக்கமாட்டா
தென அமைச்சர் மங்கள
சமரவீர தெரிவித்துள்ளார்;
ஜே. வி. பியுடன் செய்து
கொண்ட உடன்படிக்கை
தொடர்பாக நேற்று செய்தி
யாளர் மாநாட்டில் கருத்
துத் தெரிவித்த அமைச்சர்
மங்களசமரவீர மேலும்
தெரிவிக்கையில்,
ஜே.வி.பியுடன் அரசு
செய்துகொண்ட உடன்படிக்
கையில் 'தகுதிகாண் அர
[8ஆம் பக்கம் பார்க்க]

# அமைச்சரவைக் கூட்டம் 12ம் திகதி நடைபெறும்

[கொழும்பு]
பொதுஜன ஐக்கியமுன்
னணியின் 45 அமைச்சர்கள்
அடங்கிய அமைச்சரவையின்
இறுதிக் கூட்டம் 12ம்திகதி
புதன்கிழமை நடைபெற
வுள்ளது:
நேற்றுமுன்தினம் வழமை
யாக கூடவிருந்த அமைச்ச
ரவை அன்றையதினம் கூட
வில்லை அமைச்சரவையின்
எண்ணிக்கையைக் குறைப்
பது தொடர்பாக அமைச்சர்
(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### A/L இரசாயனவியல்

இரசாயனவியல் பிரத்தியேக வகுப்புக்கள், பிரிவு 2003 க்கு ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். தொடர்புகளுக்கு ஹப்பி ரெயிலரிங், 4, செட்டித் தெரு, நல்லூர். [3526]

## குண்டுச் சத்தங்கள்

[ஈச்சமோட்டை]

தென்மராட்சிப் பகுதியிலிருந்து பூநகரிபகுதியை நோக்கி படையினரின் செல் வீச்சுக்களும் குண்டுத்தாக்குதல் சத்தங்களும் நேற்று காலை7.30 மணிக்கு பலத்த அதிர்வுகளுடன் கேட்டன.

எனினும் சேதவிபரங்கள் பற்றித் தகவல் எதுவும்தெரியவரவில்லை. [செ-59]

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

[அரியாலை]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவும், பகலும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது

அன்றைய தினம் ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம், பிரசங்கம், பக்திப் பாடல்கள், மேளக் கச்சேரி என்பனவும் இடம் பெறவுள்ளன;

திங்கள் காலை 5.00 மணிக்கு சுவாமி திருவீதி உலா வரும் நிகழ்வும் இடம் பெறும்; (செ-106)

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப்பேரவையின் நல்லைக்கந்தன் உற்சவகால தெய்வீகசொற்பொழிவு நிகழ்வில் தொடர்ந்து சொற்பொழிவாற்றிய காரைசிவஸ்ரீ கு.சிவராஜசர்மாவுக்கு நல்லூர்மனோன் மணிஆலயமுன்றலில் நடைபெற்ற கௌரவிப்பு பாராட்டுவிழாநிகழ்ச்சியின்போது பேரவையின் அமைப்பாளர் அருள்நெறித் தொண்டர் சிவ.ஆறுமுகசாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார் பாராட்டுப் பத்திரத்தை தர்மதீபம் ப;சிவலோகநாதன் வழங்கி கௌரவித்தார். (உ)

## இருவர் உயிரிழப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் நேற்று முன்தினமிரவு விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இருவரின் சடலங்களும் ஐ.சி.ஆர்.சி மூலம் விடுதலைப் புலிகளிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (ந-5)

## வாகன விபத்தில் இரு படையினர் காயம்

[யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மரக்கறி ஏற்றிவந்த இராணுவ வாகனம் ஒன்று புன்னாலைக்கட்டுவன் ஆயற்கடவைப் பிள்ளையார்கோவிலடியில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது:

நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்; [ந-6]

## சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்கிணற்றில் தண்ணீர் எடுத்த போது தவறி கிணற்றுக்குள் விழுந்த சிறுமி ஒருவர் மரணமாகியுள்ளார்:

நேற்று நிகழ்ந்த இச்சம்பவத்தில்அளவெட்டிமலைவேம்படிப்பகுதியைச் சேர்ந்த ஜெனந்தகுமார் பிறேமினி (வயது-4) என்ற சிறுமியே பரிதாபகரமாக இறந்தவராவர்.

பெற்றோர் வேலைக்குச் சென்றசமயம் பிரஸ்தாப சிறுமி கிணற்றில் நீர் அள்ளிய போது கப்பிக்கயிறு அறுந்தமையால் கிணற்றில் விழுந்து மரணமாகியுள்ளார் சிறுமியின் சடலம் தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் மரண விசாரணைக்கா வைக்கப் பட்டுள்ளது. [ந-4-12]

## கலாசாரத்தை பேணாத பெண்களுக்கு அஸிட் வீச்சு

(ஸ்ரீநகர்)

இந்திய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் இஸ்லாம் பெண்கள் கலாசார உடை அணிந்து முத்திரையிட்டுவராவிட்டால் அஸிட் திராவகவீச்சுக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று தீவிரவாத அமைப்பான லஷ்கர் இதொய்பா அறிவித்துள்ளது;

இந்த அறிவிப்பின் படி காஷ்மீரில் இரு இஸ்லாம் பெண்களின் முகங்களில் அஸிட் திராவகம் வீசப்பட்டது :

இந்த உடைகலாசாரத்தை அனைத்து மதத்தவர்களும் இனத்தவர்களும்வாழும்இந்தியாவில் நடைமுறைப்படுத்த முடியாதென்றும், லஷ்கர் இதொய்பா இயக்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் தனிஇஸ்லாமியநாட்டை உருவாக்குங்கள் என்றும் காஷ்மீர் கூரியத் மகாநாட்டுக் கட்சித்தலைவர் சிலானி கூறியுள்ளார்.

லஷ்கர் இதொய்பா காஷ்மீரில் உள்ள பெண்கள் இஸ்லாமிய முறைப்படிமுகத்திரையிட வேண்டும் என்று வாதிடுவதையும் திராவகம்வீசுவதையும் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார் ; [து]

## பீடித் தொழிலாளர் ஒரு நாள் வேலை நிறுத்தம்

(சென்னை)

தமிழகமெங்கும் பீடித் தொழிலாளர் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர் :

நேற்றுமுன்தினம்தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட மேற்படி தொழிலாளர்கள் அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் ஈடுபட்டனர்.

அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா பொது இடங்களில் புகைத்தலைத் தடை செய்துள்ளார். பீடித் தொழிலாளர்களுக்கு இது பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதால் மேற்படி தடையினை நீக்குமாறு அரசை வற்புறுத்தியே அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். (து)

## ஜே.வி.பி-அரசு கூட்டு மேற்குலக நாடுகள் விசனம்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுமக்கள விடுதலை முன்னணி(ஜே.வி.பி)யுடன் இணைந்து காபந்து அரசாங்கம் ஒன்றை அமைத்திருப்பது தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் விசனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அரசின் எதிர்கால நடவடிக்கைகள்குறித்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் அரசின் நிலைப்பாடுகுறித்து வெளிநாடுகளுக்கு விளக்கிக்கூறி வருகிறார்.

பொதுஜன ஐக்கியமுன்னணியால் அரசுக்குமுன் வைக்கப்பட்டுள்ளநிபந்தனைகளால்இந்தியா அமெரிக்க மற்றும்மேற்குலக நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படுமென அரசியல்விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

உள்நாட்டுயுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் அனுசாரணைகளுக்குமான எதிர்ப்புக்கள என்பனஜே.வி:பியின் நிலைப்பாடுகள் சர்வதேச சமூகத்திற்கு ஏற்புடையனவாக அமையாதுஎன்றும் கொழும்பிலுள்ள அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## தீயிற்கருகி பலியானோர் எண்ணிக்கை உயர்வு

(பிறிடோறியா )

தென்னாபிரிக்காவின் தேசியப் பூங்காவில் ஏற்பட்ட தீவிபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 27 ஆக உயர்ந்துள்ளது:

பலியான 27 பேருக்கும் தென்னாபிரிக்க ஜனாதிபதி சகோமெக்கின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார். (உ-7)

## விசர்நாய் கடித்து மரணம்

(யாழ்ப்பாணம்)

விசர்நாய்க்கடிக்கு இலக்காகி யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்றைய தினம் மரணமாகியுள்ளார்.

நவக்கிரி மேற்கு புத்தூரைச் சேர்ந்த சேனாதிராசா சதாசிவம் (வயது-60) என்ற வயோதிபரே மரணமானவராவார். (ந-5-10)


## பெயர் மாற்றம்

வசாவிளான் கிழக்கு, வசாவிளானைச் சேர்ந்த
விஜயரட்ணம் ஜெயசண்டர்
ஆகிய நான் எனது பெயரை
**விஜயரட்ணம் ஜெயசங்கர்**
என பெயர் மாற்றம் செய்து கொள்கின்றேன்.

வி. ஜெயசங்கர்

வசாவிளான் கிழக்கு,
வசாவிளான். (C-2468)

## கேள்விப்பத்திர அறிவித்தல்

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும வடக்கு-கிழக்கின் தமிழ்விவகாரங்கள் அமைச்சு

கேள்விப்பத்திர இல: DRRN/JH 01

யாழ். போதனா வைத்தியசாலைக்கான

**கழிவகற்றும் கருத்திட்டம்**

மேற் கூறப்பட்ட கழிவகற்றும் கருத்திட்டத்தினை நிர்மாணிப்பதற்கென ICTAD உடன் பதிவு செய்யப்பட்ட தரம் M 6ஆம் அல்லது அதற்கு மேலானதுமான NACCSL ன் உறுப்பினர்களரன ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள்கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திர ஆவணங்களை யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ளவடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சரின சுற்றுவட்ட அலுவலகத்தில் 2001 செப்டம்பர் 10 ஆம் திகதி தொடக்கம் 2001 செப்டம்பர் 24 ஆம் திகதி வரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூ 1000/= ஐ அலுவலக நேரங்களில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

2001 செப்டம்பர் 29 ஆம் திகதி உள்நாட்டு நேரப்படி 14.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் முடிவடைந்த கையோடு, உடனடியாக அக்கேள்விப்பத்திரங்கள திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது, கேள்விப்பத்திரதாரர்கள அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப்பத்திரதாரர்கள் விலைக்குறிப்பீடுகளை கேள்விப்பத்திர நிபந்தனைகளுக்கு முற்று முழுதாக அமையும் வகையில் பூரணப்படுத்தி கேள்விப்பத்திர ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு விலைக் குறிப்பீட்டுப் பிணையையும் இணைத்து அனுப்புவது இன்றியமையாததாகும்.

கேள்விப்பத்திரங்களை நேரில் வந்து வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சரின் சுற்றுவட்டஅலுவலகத்திலுள்ளகேள்விப்பத்திரப் பெட்டியில் வைப்பிலிடப்படலாம்.

**தலைவர்**

கேள்விப்பத்திர சபை
வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு
மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு
இல. 14 சேர் பாரோன் ஜயதிலக மாவத்தை
கொழும்பு-01

(C-2455)

## நல்லூர் பிரதேச சபை

## அறிவித்தல்

01) நல்லூர் பிரதேச சபையின் வேலைத்திட்டங்களுக்காக நான்கு சில்லு உழவு இயந்திரம் (4 Wheel Tractor) சபையால் கொள்வனவு செய்ய இருக்கின்றது. கொள்வனவு செய்யப்பட இருக்கும் கீழே குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த உழவு இயந்திரத்தை விற்பனை செய்ய விரும்புபவர்கள் இதற்கான கேள்விப் படிவத்தினை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்குமாறு கோட்டுக் கொள்கிறேன். மேலதிக விபரத்தையும் கேள்வி நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 12-09-2001 நண்பகல் 12-00 மணிக்கு முன்பெற்றுக் கொள்ளவும்.

இக்கொள்வனவு தொடர்பாகக் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும்;

01] Massey Fergusen Tractor (4 Wheel)
02] Original England
03] Model 240 2WD

2) புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட குபாட்டா [KUBOTA] கே. 75 இரண்டு சில்லு உழவு இயந்திரம் கலப்பையுடன் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது அலுவலகத்துடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப்படிவத்தினை 14-09-2001 க்கு முன் பெற்று விண்ணப்பிக்கவும்;

க. மணிபல்லவராஜன் (ஜே. பி. யு. எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,

(கி-2468)

# கப்பல்பதிவு இன்று இல்லை

[யாழ்ப்பாணம்]

வடபகுதி மக்களுக்கான கப்பல் பதிவுகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல் இன்று இடம் பெறாது எனவும், இப்பதிவுகள் இடம் பெறும் தினம் பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் எனவும் றான் அலுவலகம் அறிவித்துள்ளது.

(உ-7)

# சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 40 வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, யாழ் பிராந்திய விளையாட்டுக் கழகம் ஆண்களுக்கான மாபெரும் சைக்கிளோட்டப் போட்டியை நாளை நடத்தவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றலில் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும் இச் சைக்கிளோட்டப் போட்டி பருத்தித்துறை வீதி ஊடாக முதலாம் கட்டைச் சந்தி வரை சென்று, தம்பசிட்டி வீதி ஊடாக நாவலடிச் சந்தி வரை சென்று, வியாபாரி மூலை வீதி ஊடாக கடற்கரை வரை சென்று, கடற்கரை வீதி ஊடாக வல்வெட்டித்துறை சந்தி வரை சென்று வல்வெட்டித்துறை வீதி ஊடாக உடுப்பிட்டிச் சந்தி வரை சென்று, வல்லைவெளி ஊடாக அச்சுவேலி வரை சென்று இராஜ வீதி ஊடாக ஈவினை சந்தியை அடைந்து சுன்னாகம் வீதி ஊடாக சுன்னாகம்சந்திவரைசென்றுகாங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோவில் முன்றல் வரை சென்று நிறைவு பெறும்.

(உ)

# கசிப்பு அருந்திய 38 பேர் பலி

[கேகாலை]

கேகாலை மாவட்டத்தில் டெடிகம என்ற இடத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இற்றைவரையான காலப்பகுதியில் கசிப்பு அருந்திய 38 பேர் பலியாகியுள்ளனர்.

இவர்களுள் நால்வர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

[உ]

# தேடுதல்

[யாழ்ப்பாணம்]

இணுவில்- தாவடிப் பகுதிகள் நேற்று படையினரால் சுற்றி வளைப்பு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன.

பெரும் எண்ணிக்கையான படையினருடன் இணைந்து பொலிஸாரும் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(உ-6)

## சமாதான முயற்சி பற்றி விவாதிக்க வருக!

# ஊனமுற்ற படையினர் புலிகளின் தலைவர் பிரபாவுக்குக் கடிதம்

(கொழும்பு)

சமாதான முயற்சி பற்றி விவாதிக்க வருமாறு கோரும் கடிதம் ஒன்றினை தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனுக்கு காணாமல் போன படையினரின் உறவினர் சங்கமும் ஊனமுற்ற படையினர் சங்கமும் இணைந்துஅனுப்பிவைத்துள்ளன.

இக்கடிதம் அனுப்பும் நிகழ்வில் பெருமளவான ஊனமுற்ற படையினரும் காணாமற்போன படையினரின் உறவினர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஏற்பாட்டாளரான பிரபல வர்த்தகர் லலித்கொத்தலாவல இந் நிகழ்வில் உரையாற்றுகையில்,

புலிகளுடன் பேச வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். அவர்கள் அதற்குச் சம்மதிப்பார்களா என்று வினாவியதுடன்,

பெரும்பான்மை இன மக்களான எங்களுடன் பேசிஇனப் பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என்றும்,

பேச்சுக்களை உள் நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வைத்துக் கொள்ள முடியும் என்றும் உரிய இடத்தை தலைவர் பிரபாகரன் அறிவித்தால் அதற்குத் தாம் ஆவலாகவும் தயாராகவும் இருப்பதாகவும்குறிப்பிட்டார்.

ஊனமுற்ற படைவீரர் ஒருவர் பேசுகையில்;

18வருடகாலமாகத் தொடரும் இனங்களுக்கு இடையேயான மோதலுக்கு முற்றுப் புள்ளி வைப்பது அவசியம்.

தற்போது அமைக்கப்படும் காபந்து அரசினால் இந்தக் கடமையை ஆற்ற முடியாது என்று குறிப்பிட்டார். (உ-4)

# பனம் பண்டங்களை சந்தைப்படுத்தத் திட்டம்

((யாழ்ப்பாணம்)

தரமான ஒடியல் மற்றும் புழுக்கொடியல் போன்றவற்றை கையிருப்பில் வைத்திருப்போர் தம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

மேற்படி பனம் பண்டங்களைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் நோக்கிலேயே பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்ட அறிவிப்பை விடுத்துள்ளது.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பனை அபிவிருத்திச்சபையின சந்தைப்படுத்தும் பகுதியுடனோ அல்லது கண்டி வீதியிலுள்ள சபையின் தலைமை அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளலாம்என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# சாரதி பதவிக்கு விண்ணப்பம்

(மந்திகை)

பருத்தித்துறை நகர சபை இழு பொறி இயந்திர சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

[உ-23]

# இராசி பலன்

07-09-2001

(ஆவணி22, வெள்ளி)

சதுர்த்தி மு.ப 9:02 வரை
அச்சுவினி பி.ப 6.32 வரை
ராகுகாலம் 10.34 12.04
நல்லநேரம் 6.04-7.34
அமிர்தசித்தம்

**மேடம்**

ஜனவசியம், நல்லமுயற்சி, ஆழ்ந்தசிந்தை, உடல்நலம்.

**இடபம்**

பிரயாணம், சுபசெலவு, காரியதாமதம், கோபப்படுதல்.

**மிதுனம்**

கீர்த்தி, காரியஅனுகூலம், தெய்வதரிசனம், குடும்ப சுகம்.

**கடகம்**

தொழில்வெற்றி, சுப நிகழ்வு, கீழ்ப்படிவு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

புதிய திட்டமிடல், அச்சமான நிலை, காரியதாமதம், பெரியோர் மதிப்பு.

# 2001 ஆம் ஆண்டிற்கான ஆங்கில தினப்போட்டிகள்

(புலோலி)

கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள 2001 ஆம் ஆண்டிற்கான மாவட்ட உப மாகாண ஆங்கில மொழி தினப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகி 19 ஆம் திகதிவரை நடைபெறுமென யாழ். மாவட்ட உப- மாகாண ஆங்கிலமொழி தினப்போட்டிஒழுங்கமைப்புக் குழுத்தலைவருமவடமராட்சி வலய கல்விப்பணிப்பாளருமான எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. 14 ஆம் திகதி வாய்மொழி தனி நபர் போட்டியும் 15 ஆம் திகதி எல்லாஎழுத்துப்போட்டிகளும் 17 ஆம் திகதி எல்லாப்பாடல் போட்டிகளும் 18 ஆம் திகதி கனிஷ்ட, சிரேஷ்ட உரையாடல், நாடகப் போட்டிகளும் 19 ஆம் திகதி சிரேஷ்ட கவிதை நாடகம், ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான நாடகப்போட்டிகளும் நடைபெறவுள்ளன. (செ-52)

## யாழ்-பல்கலைக் கலைப்பீட

# புகுமுக மாணவர்களுக்கு வழிகாட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் எதிர்வரும் 14

இவ்வழிகாட்டல் வகுப்புக்களுக்கு 2001/2002கல்வியாண்டிலபதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள்

# விசேட அபிஷேகம்

[அரியாலை]

திருவில் அருள்மிகு வயலூர் முருகன் ஆலயத்தில் விசேட அபிஷேகம் மற்றும் பூசைகள் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

[செ-106]

# இராஜகோபுர கும்பாபிஷேகம்

(அரியாலை)

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பஞ்சதள இராஜகோபுரத்திற்கான மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை6. 40 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன. (செ-106)

# உறியடி உற்சவம்

[அரியாலை]

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ் வார் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உறியடி உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. இவ்விரு தினங்களும்மதியம் மகேஸ்வர பூசையும் இடம் பெறும்.

[செ-106]

## பட்டம்வழங்கி

# கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில் மேற்கு ஞான வைரவர் ஆலயத்தில் வருடாந்த உற்சவகாலங்களில் தொடர் சொற்பொழிவாற்றிய சமயப் புலவர் ப. சாந்தகுமார், ஆசிரிய மணி சி. ஸ்ரீ தயாளனால் ''இறைஞானச் சொல்லழகர்'' என்னும பட்டம்வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

(செ)

# ஒலிப்பேழை வெளியீடு

(அரியாலை)

அரியாலையூர் கவிஞர் திலகம் அருட்கவி நாக பரமசாமி அவர்களின் 'நாச்சியார் நான்மணிமாலை' ஒலிப் பேழை வெளியீட்டு விழா இன்று பி.ப 3. 30 மணிக்கு வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் குகஸ்ரீ க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

உள்ளாக்கப்பட்டனர்.

பெரும் எண்ணிக்கையான படையினருடன் இணைந்து பொலிஸாரும் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். [P -6]

## பஜனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில நாளை மறுதினம் காலை 9.00 மணி தொடக்கம் வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் குழுவினரின் பஜனை இடம் பெறவுள்ளது. (செ)

## காட்டுப் பாதையில் கைது

(மன்னார்)

மன்னாரிலிருந்து காட்டுப் பாதை வழியாக முருங்கன் வந்த தமபதியினரும், மற்றும் இரு ஆண்களும இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மன்னார் விசேட புலனாய்வுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட நால்வரும் மன்னார் நீதவான் எம். எச். எம். அஸ்மீர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர் பொலிஸாரின்விளக்கமறியல் கோரிக்கையை நிராகரித்து அவர்களை விடுதலை செய்துள்ளார். (ம)

**சிங்கம்**

புதிய திட்டமிடல், அச்சமான நிலை, காரியதாமதம், பெரியோர் மதிப்பு.

**கன்னி**

எதிர்பாராத பிரச்சினை, காரியதடங்கல், பிரயாண பயம், உடல்வியாதி.

**துலாம்**

தனலாபம், வரவேற்பு, காரிய நன்மை, தொழில் நன்மை.

**விருச்சிகம்**

சத்துருஜெயம், முயற்சி விருத்தி, மனமகிழ்ச்சி, ஆரோக்கிய நிலை.

**தனுசு**

நிலைக்கேடு, குடும்பக் கவலை, காரியதாமதம், தாழ்வுநிலை.

**மகரம்**

தன்னம்பிக்கைக்குறைவு, அற்பர் நேசம், முயற்சிதாமதம், வியாதிபயம்.

**கும்பம்**

பிரயாணம், இனியசம்பவம், காரியஅனுகூலம், கூட்டு முயற்சி.

**மீனம்**

வாக்கு கலகம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

**வளவன்**

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைபபீட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வழிகாட்டல் வகுப்புக்களுக்கு 2001/2002கல்வியாண்டிலபதிவுகளை மேற்கொண்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (உ)

## செஞ்சிலுவை அலுவலகம் மீது கிரனேற் வீச்சு

(திருமலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை, மூதூரில் அமைந்துள்ள அலுவலகம் மீது இனந்தெரியாதோரால் கிரனேற் வீசப்பட்டதால்அலுவலகத்தில்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் சேதமடைந்ததுடன் கட்டடத்திற்கும் சிறிது சேதமேற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்நள்ளிரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அடுத்தடுத்து மூன்று கிரனேற்றுக்கள் வீசப்பட்டபோதும் இரண்டு கிரனேற்றுக்களே வெடித்தன.

இக்கிரனேற் தாக்குதல் அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் திருமலை அலுவலக வெளிக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (செ)

## விசர் நாய் கடித்து படை வீரர் பலி

(திருகோணமலை)

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு படையினர் ஆதரிக்கும் கட்டாக்காலிநாய்கள் அவர்களுக்கே இயமனாக மாறும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக அறியமுடிகிறது.

திருகோணமலைஇராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும்14 படைவீரர்களை அந்த முகாமில்திரியும்கட்டாக்காலி விசர்நாய் ஒன்று கடித்ததில் ஒரு படை வீரர் திருகோணமலை ஆஸ்பத்திரியில் மரணமடைந்துள்ளார். [உ]

வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் குகஸ்ரீ க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறவுள்ளது.

அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் வாழ்த்துரையை மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயரும் வழங்குவர். (செ-106)

## மூவருக்கு கராத்தேயில் கறுப்புப்பட்டி

(சுண்டுக்குளி)

யாழ்பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற கராத்தே முதலாம் கறுப்புப் பட்டிக்கான தரம் உயர்த்தும் நிகழ்வில் பல்கலைக் கழக மாணவர்களான கணனி விஞ்ஞான சிறப்புப் பிரிவு மாணவன் ரி கேதீசன், பொது விஞ்ஞானப்.பிரிவு மாணவன் ரி. மோகனரங்கன் முகாமைத்துவப் பிரிவு மாணவன் எஸ். சர்வானந்தன் ஆகிய மூவருக்குகறுப்புப்பட்டி வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக் கழகக் கராத்தே அணியின் முகாமையாளர் என். சிவமோகன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகக்கராத்தே அணியின் பயிலுநர் சென் சேவ் ஏ. ரஞ்சித்ஷிலேந்திரகுமார் கறுப்புப் பட்டிகளை மூவருக்கும் வழங்கினார். [உ -10]

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல :73 தொகுப்பு: ]ரீ. மயூரன்

### நுண்ணறிவு

★ கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட 5 சொற்களில் இரண்டு சோடிச் சொற்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. எஞ்சிய சொல்லின் கீழ் கீறிடுக.

01) அனல், அம்பு, பலன், கனவு, வம்பு
02) அப்பு, குற்றம், காசு, புத்தகம், நீர்
03) அழகு, தம்பி. பசு, சிறை, ஆச்சரியம்
04) 1234, 353, 8156, 809, 92
05) அண்மை, புத்தகம். நூல், அருகாமை, தூரம்

★ 6-10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் எழுத்துக்களின் ஐந்து தொகுதிகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒருதொகுதி ஏனையவற்றுடன்பொருந்தி அமையவில்லை. அதனைத்தெரிவு செய்க.

06) AB. MN. PQ. ST. VX [———]
07) YX. RS. ON. JI, HG [———]
08) XVU. SQP, MLJ, ECB, PNM [———]
09) P. Q. D. E. O [———
10) AE, EI, IM, RV, VY [———]

★ 11-15 வரையான வினாக்களில் உள்ள எண்களின் கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக.

11) 1, 7, 14, 22, ———
12) 6, 5, 3, 0, ———
13) 1, 12, 5, 14, 9, 16, 13, ———
14) 4, 9, 16, 25, ———
15, ———, 4, 8, 16

★ 16-20 வரையான வினாக்கள் எண் குறியீட்டை பயன்படுத்தி அமைக்கப்பட்டது. அவ்வினாக்களுக்கு பின்வரும் சட்டகத்தைப் பயன்படுத்துக.

| 1 | 2 | $2^1$ | 3 | 4 | $4^1$ | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| ம | க் | ன் | பு | ை | க | அ | வ |

★ இதனை பயன்படுத்தி வினாக்கள் ஒவ்வொன்றிலும் வெற்றுக் கூடுகளில் வரவேண்டிய எழுத்துக்கள் எவையென கண்டு அவ்வெழுத்துக்கள் குறிக்கும் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

16)

| 5 | $2^1$ | 3 |
|---|---|---|
| | | |

(————)

17)

| 6 | 4 | $4^1$ |
|---|---|---|
| | | |

(————)

18)

| 6 | 4 | 2 | $4^1$ |
|---|---|---|---|
| | | | |

(————)

19)

| 3 | 4 | $4^1$ |
|---|---|---|
| | | |

(————)

20)

| 1 | $4^1$ | $2^1$ |
|---|---|---|
| | | |

(————)

### பொது அறிவு

★ பின்வரும் சுருக்கங்களுக்கான விரிவாக்கத்தைத் தருக

21) UPU — — —
22) ITU — — —
23) IDA — — —
24) UNIDO — — —
25) WFP — — —

★ சுருக்கமான விடை தருக

26) மண்ணுக்குள் பூக்கள் பூக்கும் செடி எது?
27) அமெரிக்காவின் 42 ஆவது ஜனாதிபதி யார்?
28) கண் தானம் செய்யும் போது கண்ணில் இருந்து மாற்றீடு செய்யும் பகுதி எது?
29) கார்கள் தயாரிப்பில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
80) சீனப் பெருஞ் சுவரின் நீளம் என்ன?

★ பின்வரும் விசேட பெயர்களால் அழைக்கப்படும். நாட்டினது நகரினது பெயரைத் தருக?

31) வெள்ளை நகரம் — — —
32) உலகின் கூரை — — —
33) உலகின் சர்க்கரைக் கிண்ணம் — — —
34) மத்திய தரைக் கடலின் திறவு கோல் — — —
35) ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் — — —

★ பின்வரும் விசேட தினங்கள் கொண்டாடப்படுவது எப்போது

36) ஐ. நா தினம் — — —
37) உலக ஆசிரியர் தினம் — — —
38) சர்வதேச அங்கவீனர் தினம் — — —
39) உலக 'எயிட்ஸ்' தினம் — — —
40) மனித உரிமைகள் தினம் — — —

குறிப்பு:

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகள் 12.09-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# மீனுக்குத் தட்டுப்பாடு

[மந்திகை]

வடமராட்சிப் பகுதியில் மீனுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் வடமராட்சிப் பகுதிக் கடலில் மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டதிலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மீன் சந்தைகளில் பெருமளவு. கருவாடுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

[செ-23]

# அறிவியல் வினா இல-72

## அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம்

★ த. தாட்சாயினி, நவாலி வீதி. ஆனைக்கோட்டை.
★ சி சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
★ அ சர்மிளா. பளை மத்திய கல்லூரி.
★ வி. பிரியா, தெல்லிப்பளையூனியன் கல்லூரி.
★ சி. கார்த்திகா, நாவலர் வீதி ஆனைப்பந்தி.
★ அ. தீபன், அளவெட்டி.
★ தி. சுமங்கலா, சுந்தர் மடம்.
★ உ. சாந்தரூபன், அளவெட்டி.

# அறிவியல் வினா இல-72 விடைகள்

01) சருகு
02) கண்மணி
03) மா 3m
04) சுநதல்
05) மேகம்
06) 17
07) 7
08) 45
09) 65
10) 6
11) ஒளி
12) புல்
13) 22
14) 4
15) மீற்றர்
16) A
17) C
18) E
19) C
20) A
21) பேஜிங்
22) பாரிஸ்
23) மணிலா
24) லண்டன்
25) புதுடில்லி
26) குக்கல், தொண்டைக் கரப்பன், ஈர்ப்புவலி
27) றொபேர்ட்குக்
28) ஹென்றி டுனாலட்
29) 1992
30) காலி
31) ஜூலை 11
32) ஒகஸ்ட் 9
33) ஜூன் 20
34) ஒக்ரோபர் 9
35) ஒக்ரோபர் 16
36) International Development Association
37) UN Environment Programme
38) United Nations University
39) UN population Fund
40) UN Industrial Development Organization

# அறிவியல் பகுதி வினா இல : 73

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..........................
சொந்த முகவரி: ..........................
கற்கும் பாடசாலை : ..........................
மாணவர் கையொப்பம் : ..........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# சிறந்த கால்நடை பண்ணையாளர்களை பாராட்டி பரிசளிப்பு

[புலோலி]

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டும் கால் நடை வைத்தியப் பிரிவுகள் தோறும் சிறந்த கால் நடைப் பண்ணையாளர்களைத் தெரிவு செய்து அவர்களைப் பாராட்டி கௌரவித்துப் பரிசில்களை வழங்கும் நிகழ்வுகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மேற் கொண்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கால் நடை வைத்திய அதிகாரி பிரிவிலும் ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களுக்கிடையே போட்டிகள் நடத்தப்பட்டு தனித் தனியாக ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் பண்ணையாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கால் நடைப் பண்ணையாளர்கள் தத்தமது பகுதி கால் நடை வைத்திய அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து வழங்குமாறு வட பிராந்திய கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர். வைத்திய கலாநிதி பீ. இராமநாதன் அறிவித்துள்ளார்.

[உ-52]

# வர்த்தக நிலையங்கள் விரைவில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மீள ஆரம்பிக்கவுள்ளதாக வணிக சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வணிகர் சங்கத்தினர் விடுத்த செய்திக் குறிப் பொன்றில்,

பெரும் இடிபாடுகளுக்கு மத்தியில் காணப்படும் சாவகச்சேரி நகரப்பகுதிகளில் வர்த்தக நிலையங்களை மீள ஆரம்பிப்பதில் பெரும் இடர்ப்பாடுகள் காணப்படுவதாகவும்,

இதனால் அப்பகுதியை துப்பரவு செய்வதற்கு நகரசபையினரிடம் வேண்டு கோள் விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# மருத்துவரின் உதாசீனம் குரங்கு நாயாகியது

(கொழும்பு)

பதுளைப்பிட்டிய பகுதியில் வெறியாட்டம் கொண்டு பலரைக் கடித்துக்குதறியகுரங்கு ஒன்றை பொலிஸார் அடித்துக் கொன்று அதன் தலையை மருத்துவப் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட பரிசோதனை அறிக்கையில் நீங்கள் அனுப்பிய நாய்க்கு வெறிபிடிக்கவில்லைஎனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது அனைவரையும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

பொறுப்புள்ள மருத்துவர்கள் இவ்வாறு பொறுபபில்லாமல் செயற்படலாமா? என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (செ)

# மல்லாவி வைத்தியசாலையில் மருந்திற்குப் பெருந் தட்டுப்பாடு

(வவுனியா)

மல்லாவி வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாடு மிகப்பெரும் அளவில் நிலவுவதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சத்திரசிகிச்சைக்கான கட்டுத்துணி, மற்றும் முக்கிய நோய்களுக்கான மருந்துகள், விசர்நாய்த் தடுப்பூசி, நீரழிவு நோய்க்கான மருந்துகள் என்பவற்றுக்கு அதிகளவில் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கடந்தமாதம் மல்லாவி வைத்தியசாலையில் 11 ஆயிரத்து 660 பேர் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளனர் (உ-4)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை பின்னணியில் புலிகள்

## 'சிலுமின' பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி, அரசுக்கெதிராக கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னால் புலிகள் இயக்கம் உள்ளதாக புலிகள் இயக்க நெருங்கிய வட்டாரங்கள் கூறியிருப்பதாகச் சிங்கள சிலுமின பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழ். முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து ஐக்கியதேசியக் கட்சி, அரசை விழுத்துமானால் சந்திரிகாவை கொலை செய்துவிட்டு அவரின் இடத்திற்கு ரணிலை அமர்த்தி தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் திட்டமிட்டதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# விலை உயர்வு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

தேங்காய் ஒன்றின் விலை 20 ரூபா முதல் 35 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. [செ-23]

## இன்று ஒரு தகவல்

# ஆல்பிரெட் நோபெல்

அறிவறிஞன் ஆல்பிரட்நோபெல் உலகறிந்த கொடை வள்ளல். ஸ்வீடன் நாடு தந்த அந்தமாணிக்கத்தை உலகின் கடைசி நாட்கள் உருண்டோடுகின்றவரையில் எவருமே மறந்திடமாட்டார்: காரணம்...? அவரின் மனித குல சேவை அவ்வளவு பெருமை வாய்ந்தது: மேன்மையுடையதுங் கூட! இலக்கியம், விஞ்ஞானம், வைத்தியம், இரசாயனம், சமாதானம் ஆகிய இவை போன்ற துறைகளிலே எவரின் சேவை மிகச் சிறந்ததாக உலகின் நாட்டு வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ, அவர்களுக்கு மத, இன, நிற வேறுபாடின்றி தன் பெயராலேயே நிறுவப்பட்டிருக்கும் 'நோபெல் பரிசை' ஆண்டு தோறும் வழங்குமாறு ஏற்பாடு செய்து விட்டுப் போனவர் நோபெல். ஒராண்டுக்கு ஐந்து பரிசில்கள் வீதம் இன்று வரை வழங்கப்பட்டு வரும், இப்பரிசைப்பெறும் விஞ்ஞானியோ, டாக்டரோ, கவிஞனோதான் உலகின் பெரிய மனிதர்களுள் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். அதிலும் ஆல்பிரெட்டின் சமாதானப் பரிசைப் பெறுபவர்களுக்குத்தான் உலகில் சிறந்த மதிப்பிருக்கிறது இந்தியாவில் கூட அண்ணல் காந்தியார், சர் சி.வி.இராமன், ரவீந்திரநாத்டாகூர், நேரு போன்றவர்கள் இவரின் பரிசைப்பெற்றவர்கள் தான்.

ஆல்பிரெட் நோபெல் இத்தகைய பரிசை வழங்குமாறு நிர்மாணித்ததின் நோக்கம, அவரின் சிறந்த கொள்கைகளும், மனிதகுல வளர்ச்சித்தத்துவங்களும் தான் காரணமாகும். கவிஞன் ஷெல்லியின் தத்துவங்களைப் பின் பற்றி வாழ்ந்த அவரின் வாழ்க்கை பகுத்தறிவைப் பின்பற்றும் வாழ்க்கையாக அமைந்ததில் வியப்பில்லை. ஆல்பிரெட் சாதாரண குடும்பத்தைசேர்ந்தவர். பரம ஏழை. கல்லூரி காணாதவர். பள்ளிப்படிப்பைக் கூட அவர் நிறைவு செய்யவில்லை. ஆனால் கடைசிக் காலத்தில்அவர் டாக்டர் பட்டம்பெற்றவராகவாழ்ந்து முடித்தது. வாழ்வில் அவர் கண்ட வெற்றியைக் குறிக்கிறது. தன் சொந்த முயற்சியால், மனிதன் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய அத்தனையையும் படித்துத் தெரிந்ததோடு தானே ஓர் உயர்ந்தரக விஞ்ஞானியாக கண்டு பிடிப்பாளனாக மாறியது பெரிதும், வியத்தற்குரிய செய்தியாகும். நோபெல்தனக்குத் தானே ஒரு விஞ்ஞானி! வீசியெறியப்படும் வெடி குண்டுகளையும், தகர்த்தெறிய மறைத்து வைக்கப்படும் டைனமைட்டுகளையும் நோபெல் தான் முதன்முதல் 1862ல் கண்டு பிடித்தார். 1889ல் புகையில்லாமல் வெடித்து உலகையே பாழ்படுத்தும் வெடிமருந்துகளையும் அவர் தான் கண்டுபிடித்தார். இந்த இரண்டு கண்டு பிடிப்புகள் அவரைக்கோடீஸ்வரனாக்கிற்று! செல்வம் கொழித்தது.

தான் கண்டுபிடித்ததுவெடிகுண்டு- மனித குலத்தை அழிக்கவல்லது! இந்தப்பாவகரமான செயலிற்குப் பரிகாரம் செய்யவோ என்னவோ தான் அவர் ஒரு 'டிரஸ்டை' நிறுவி தன் பெயராலேயே ஐந்து பரிசுகளை ஆண்டு தோறும் வழங்குமாறுஏற்பாடு செய்தார் போலும், எது எங்ஙனமானாலும் நோபெலின் பரிசு உயர்ந்த மதிப்புடையது சமாதானப் பிரியரான அவரின் வாழ்க்கையும் எண்ணமும் பகுத்தறிவால் அமைக்கப்பட்டது: அவரோ சிறந்த விஞ்ஞானி! உலகம் அவருக்குக கடமைப்பட்டிருக்கிறது. அதிலும், கலை இலக்கியம், விஞ்ஞானம், இரசாயனம், சமாதானம் போன்ற துறைகளில் பாடுபட்டு வரும் பெருவீரர்களுக்கு நோபெல் தான் முன்னோடும் பிள்ளை. [அவரின் காலம்1833-1896ஆகும்] வாழ்க நோபெல் செயல். வாழ்க அவரின் மனிதகுல சேவை □

ஓவியன் அ. சீனு

# பழுதடைந்த சக்கர நாற்காலிகளை திருத்த நிதி உதவி

(மந்துகை)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஊனமுற்றோர்க்கு சமூகசேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகளில் பழுதடைந்தவற்றைத் திருத்திக்கொடுக்க யு. என். எச். சீ. ஆர் நிறுவனம் நிதியுதவிவழங்கவுள்ளது.

மேற்படி சேதமடைந்த சக்கர நாற்காலிகளைத் திருத்த விரும்பும், தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமத்தில் வசிப்போர் இணுவிலில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்துடனும்,

வடமராட்சியில் வசிப்போர் மாலுசந்திப் பகுதியிலுள்ள தெனமராட்சி பிரதேச செயலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-23)

# புலமைப்பரிசில்கொடுப்பனவு 3 மாதத்திற்கு ஒரு முறை வழங்க நடவடிக்கை

(யாழ்பபாணம்)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத்தோற்றி சித்தியடையும் மாணவர்களுக்கு 3 மாதத்திற்கு ஒரு தடவை கொடுப்பனவுகள் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வருடத்திற்கு ஒருமுறை மேற்படி கொடுப்பனவு வழங்கப்படுவதால் வறியமாணவர்கள் எதிர்நோக்கும் பொருளாதாரச் சிக்கல்களைக் கருத்திற் கொண்டே புதிய நடைமுறை அமுல் படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, இக்கொடுப்பனவைப்பெறும் மாணவர்களின் வரவைக் கருத்திற் கொண்டு அவர்களதுகொடுப்பனவைத் தீர்மானிக்க வேண்டும் என வடக்கு- கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அதிபர்களைக் கேட்டுள்ளது. [உ]

# சைக்கிள் தரிப்பிடம்

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு நூல் நிலையத்திற்கு புதிதாக அமைக்கப்பட்ட சைக்கிள் தரிப்பிடம் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. உ-122)

## தமிழர் விடுதலைக் கூட்டணியின்

# கொள்கை விளக்க ஏடாக சுதந்திரன் வெளியிடப்படும்?

(தென்மராட்சி)

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பிரசார ஏடாகவிருந்த 'சுதந்திரன்' பத்திரிகையை மீண்டும் வெளியிடுவது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசித்து வருவதாக கூட்டணி வட்டாரங்களில்இருந்து தெரியவருகின்றது.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் கொள்கைகள செயற்பாடுகள், திட்டங்கள் பற்றி பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வமாக எடுத்துக் கூற கட்சிக்கு ஒரு பத்திரிகை மிக அவசியம் என கட்சியின் ஆதரவாளர்கள் வலியுறுத்தியுள்ளதையடுத்தே இவ்வாலோசனை செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை, சுதந்திரன் பத்திரிகையின் பதிப்புரிமை தந்தை செல்வாவின் மகனான சட்டத்தரணி சந்திரகாசனிடம் இருப்பதால் அவருடன் தொடர்பு கொண்டு பதிப்புரிமையைப் பெறுவது பற்றியும் ஆலோசிக்கப்படுகின்றது.

சுதந்திரன் பத்திரிகை தற்போது தமிழகத்தில் சட்டத்தரணி சந்திரகாசனால் வெளியிடப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரன் பத்திரிகைக்கான பதிப்புரிமை கிடைக்கத் தவறும் பட்சத்தில் உதயசூரியன் என்ற பெயரில் கூட்டணி பத்திரிகையை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-77)

## தந்தை செல்வாவிற்கு வெண்கலச் சிலை

# நிறுவ முடிவு

(தென்மராட்சி)

யாழ் நகரில்அமைந்துள்ள தந்தை செல்வாநினைவாலயத்தில் தற்போதுள்ள சீமெந்தினாலான தந்தை செல்வாவின் முழு அளவிலான உருவச் சிலையை அகற்றி வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலையை நிறுவுவதற்கு தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு முடிவு செய்துள்ளது,

அதேவேளை நினைவாலயத்தின் பாதுகாப்பைக கருத்தில் கொண்டு அரைச்சுற்று மதில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-77)

# கல்விக் கல்லூரிகளின் பீடாதிபதிகள் 22 பேர் வெளிநாட்டு சுற்றுப்பயணம்

(கொழும்பு)

தேசிய கல்விக் கல்லூரிகளில் கடமைபுரிந்து வரும் பீடாதிபதிகள், உப பீடாதிபதிகளில் 22 பேர் இம்மாதம் 8 ஆம் திகதியில் இருந்து 5 வாரங்களுக்கு கனடா மற்றும் ஐக்கிய இராச்சிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இதில் தமிழ்மொழி மூலம் போதனைகளை மேற்கொள்ளும் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி உப பீடாதிபதி சி. பாககியராசா, யாழ்ப்பாண தேசியக் கல்விக்கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி ஏ.எல்.எம்.காசிம் ஆகிய மூவரும் அடங்குவர், (உ)

# தீவைக்கும் தீச்செயலில் மிருகவேடுவர்

(கொழும்பு)

வறட்சியைச் சாதகமாக்கி காடுகளுக்கு விஷமிகள் தீவைககும் சம்பவம கண்டிப் பகுதியில் தீவிரமாக நடைபெறுகிறது.

மிருக வேட்டையில் ஈடுபடுவோரே இத் தீயசெயலைச் செய்கின்றனா.

இவ்வாறு காடுகள் தீ வைத்து அழிக்கப்படுவதால் நீர்வளம் குறைந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். [செ]

# வர்த்தக சமூகம் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனதிபதி, பாராளுமன்றததை மீண்டும் ஒததிவைத்தால், அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதை நிறுத்தப்போவதாக வர்த்தக சமூகத்தினர் எச்சரித்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வர்த்தக சமூகத்தினரின்ஒரு பகுதியினர் மேற்படி எச்சரிக்கையை அரசிற்கு விடுத்துள்ளனர்.

அரசாங்கம், தமது எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாது விட்டால் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தயங்கமாட்டோமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அரசும் விடுதலைப் புலிகளும் உடன்யுத்த நிறுத்தம்செய்து பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டுமென நாட்டின் முக்கிய வர்த்தக சம்மேளனங்களும் வர்த்தக அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கையிலுள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனம், இலங்கை கப்பல் முகவர் சங்கம், கொழும்பு தேயிலை வர்த்தக சங்கம், இலங்கை பிரயாண முகவர் சங்கம், அவுஸ்திரேலிய வர்த்தகசபை, கனடா வர்த்தக சபை உட்பட மற்றும் பல வர்த்தக அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்படி எச்சரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (உ-5)

# முன்பள்ளி விளையாட்டு

(புலோலி)

மேலைப்புலோலி சதாவதானி முன்பள்ளி இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதின்ம்சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மைதானத்தில் முன்பள்ளிபெற்றோர்சங்கத் தலைவர் எம். வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியிலே பருத்தித்துறை பிரதேசசபைத்தலைவா ஐ ஸ்ரீரங்கேஸ்வரன், பிரதேச செயலர் ஏ.சிவசுவாமி ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். [செ-52]

# வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை அனுசரிக்க பொலிஸார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போக்குவரதது விதிகளை மீறும் வாகனங்கள், யாழ். நகரப்பகுதியில் வீதிப்போககுவரத்துகணகாணிப்புப்பொலிஸாரால் தடுத்து வைத்து தண்டப் பணம் அறவிடப்படுகிறது.

ஒருவழிப்பாதை நடைமுறையினை மீறும் மற்றும் இலக்கத்தகடின்றி போக்குவரத்தில் ஈடுபடும் மோட்டார் சைக்கிள், பாரவூர்திகள், சிற்றூர்திகள், சைக்கிள்கள் என்பன தடுத்து நிறுத்தப்படுவதுடன், தண்டப்பணம் அறவிடப்படுகின்றது.

அசெளகரியங்களைத் தவிர்க்கும் வகையில், போக்குவரத்து விதிகளை அனுசரித்து நடக்குமாறு யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களைக் கேட்டுள்ளார். (உ-10)

# கோழிக்குஞ்சு விநியோகம்

[புலோலி]

வடமராட்சி கால நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், பதிவு செய்யப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கான கோழிக்குஞ்சு விநியோகம் நாளை சனிக்கிழமை மேற்கொள்ளப்படுமெனச் சங்கத் தலைவர் சாம் செபஸ்ரியன் அறிவித்துள்ளார்.

அச்சுவேலி பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட நல்லினக்கோழிக்குஞ்சுகளே விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-52)

# தபால் பொதிகள் எடுத்துவருகை

[யாழ்ப்பாணம்]

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் குடா நாட்டிற்கான 476 வெளியூர் தபால் பொதிகள எடுதது வரப்பட்டுள்ளன.

மேலும் குடாநாட்டில் இருந்துவெளியூருக்கான 59 தபால பொதிகள அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகபிரதம தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் 500ரூ. 1000 ரூ. பெறுமதியான முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன எனவும் அவை உடனடியாக விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10, 6)

## காட்டு யானை

# தாக்கியதில் பெண் காயம்

(கொழும்பு)

இறப்பர் பால எடுக்கச் சென்ற பெண் தொழிலாளியை காட்டு யானை தாக்கியதில் காயமடைந்த நிலையில் அவர் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாத்தளை மகாராஜா தோட்டத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதனால்அப்பகுதியிலுள்ள தோட்டங்களில் வேலைக்கு செல்வதற்கு தொழிலாளர்கள் அச்சம் கொண்டுளளனர். [செ]

# டேர்பன் மாநாட்டில் இருந்து ஐரோ. யூனியன் வெளியேறும்?

(பிறிடோறியா)

தென்னாபிரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் இனவிரோதத்திற் கெதிரான மாநாட்டில் ஆபிரிக்காவிற்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் கருத்து முரண்பாடு நிலவிவருகிறது.

ஆபிரிக்காவில் இருந்து மக்களை அடிமைகளாககொண்டு சென்றமைக்கு அமெரிக்காவும் ஐரோப்பாவும் மன்னிப்புக் கேட்பதுடன் அதற்கான நஷ்டஈடு வழங்கவேண்டுமென்றும் ஆபிரிக்க நாடுகள் தொடர்ந்து வற்புறுத்திவருகின்றன.

இது தொடர்பாக நமீபியாவும் நல்யாவுமேபிடிவாதமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்கா கடந்த திங்கட்கிழமை மாநாட்டைவிட்டு விலகுவதாக அறிவித்திருந்தது: அதற்கு முன்னர் இஸ்ரேலும் மாநாட்டில் இருந்து விலகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது;

இம்மாநாட்டில் அடிமை நிலை பிரச்சினையோடு இஸ்ரேலுக்கு எதிரான குரலும் ஒங்கி எழுவதால் அதனை தடுக்குமாறு ஐரோப்பிய யூனியன் ஆபிரிகக நாடுகளை கோரி வருகிறது.

எனினும் ஆபிரிக்க நாடுகள் அதற்கு ஆதரவு வழங்கமறுத்தால் ஐரோப்பிய யூனியனும் வெளியேறவேண்டிவரும் என பிரான்ஸ் நாட்டு அதிபர் அயனர் சுஸ்மிந் ஐரோப்பியஒன்றியத்தின்சார்பாக எச்சரிக்கை ஒன்றைவிடுத்துள்ளார். (உ-7)

# ஒரே சீனக் கொள்கை ஐரோ. யூனியன் வரவேற்பு

[பீஜிங்]

சீன தாய்வான் பிரச்சினைக்கு ஒரே சீனா என்ற கொள்கையை ஐரோப்பிய யூனியன் வரவேற்றுள்ளது.

பேச்சு வார்த்தை மூலம் சீனாவும், தாய்வானும் பிரச்சினைக்கு முடிவு காணலாமெனவும் தெரிவித்துள்ளது:

இரு நாடுகளும் இதற்கு இணங்க இருந்த போதிலும் அமெரிக்காவின் தலையீட்டால் சில தாமதங்கள் ஏற்படுகின்றன; (து)

# ஜெயலலிதா மீதான வழக்கு விசாரணைக்கு

(சென்னை)

தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற கட்சித் தலைவரையேஆளுநர் அழைத்து முதல் மந்திரியாக்கியிருக்கிறார் என்று முதல்வர் ஜெயலலிதா சார்பில் தோன்றிய வழக்கறிஞர் வாதாடினார்.

குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஜெயலலிதாவை முதலமைச்சராககியதற்குஎதிராகத் தொடுக்கப்பட்டவழக்கின் இரண்டாம்நாள் வாதத்தின் போதே வழக்கறிஞர் இவ்வாறுகுறிப்பிட்டார்.

இதேவேளை உச்சநீதிமன்ற நீதிபதிகள் குறுக்கிட்டு தேர்தலில் நிற்பதற்குத் தகுதியற்றவர் என்று தீர்ப்பு வழங்கப்பட்டவருக்கு முதல்வர் பதவி கொடுக்கும் பொழுதுஆளுநர் தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலேரசித்திருக்கலாமல்லவா என்று வழக்கறிஞரைப் பார்த்துக் கேட்டார்.

இதேவேளை சட்டமா அதிபர் சோலி சொறாஜிடம் நீதியரசர்கள் ஜெயலலிதா நியமிக்கப்பட்டது சட்டவிரோதமானது என்றால் அதன் விளைவு என்னவாகுமென்று கேட்டார்கள;

ஜெயலலிதாவின் நியமனம் சட்டவிரோதமானால் அவர் முதலமைச்சராகத் தொடர முடியாது என்று சட்டமா அதிபர் சொறாஜி கூறினார்.

இதற்கு நீதிபதிகள் இதுஒரு தனிநபர் பிரச்சினையல்ல, இவருடன் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின்பிரச்சினையும் எனவே அரசிற்கு ஒரு வெற்றிடம் ஏற்படுமல்லவாஎன்று சட்டமா அதிபரிடம் கேட்டார்கள்.

இதற்கு கால அவகரசம் வேண்டும் என்றுசட்டமா அதிபர் சொறாஜிகேட்டுக்கொண்டார்; (து)

# உலக தரிசனம்

# ராஜீவ் கொலையாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிச்சயிக்கப்படவில்லை

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகள் மூவருக்கும் எதிர்வரும் 18ஆம்திகதிமரண தண்டனை வழங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என இந்தியச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குற்றவாளிகளான முருகன் சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவருக்கும்எதிர்வரும் 18ஆம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் எனசெய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால் அவர்களது மரண தண்டனை தொடர்பானஉத்தியோகபூர்வ அரச அனுமதி இதுவரை கிடைக்கவில்லை.

அரச அங்கீகாரம் பெற்ற உத்தியோக பூர்வ அறிவித்தல் வழங்கப்பட்ட அடுத்த வாரமே இவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் திகதி தீர்மானிக்கப்படும் என அவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மூன்று குற்றவாளிகளும் தமது தண்டனையை விலக்க அனுதாபம்காட்டுமாறு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த மனு பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் சில வேளை அவர்களது தண்டனை குறையும்வாய்ப்பு உள்ளதாகவும் மேலும் அதிகாரிகள்தெரிவிக்கின்றனர்.

தூக்குத்தண்டனைவிதித்து பின்னர் ஆயுள் தண்டனையாகக்குறைக்கப்பட்ட குற்றவாளியாக கருதப்படும்நளினி வேலூர் மகளிர் தனிச் சிறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# நீரை வேறு குழிக்கு மாற்றும் முயற்சியில் அதிகாரிகள் ஏமாற்றம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் எரிமலை ஒன்றில் ஏற்பட்ட பாரிய குழியில் தேங்கியுள்ள நீர்க்கசிவினை தடுக்கும் முயற்சி ஆபத்தில் முடிவடையும் நிலை தோன்றியுள்ளது;

கடந்த 10 வருடங்களின் முன்னர் 'பினற்றில் போர்' என்ற எரிமலை வெடித்து 800 பேர் பலியாகினர்.

மேற்படி எரிமலைக் குமுறல் ஒய்ந்த பின்னர் மலை உச்சியில் தோன்றிய குழியிலேயே தற்போது 13 மில்லியன் கலன் நீர் தேங்கியுள்ளது.

இந்த நீர்அணைகளை உடைத்து வெளியேறினால் மலை அடிவாரத்தில் வாழும் 45 ஆயிரம் குடும்பங்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது:

13 மில்லியன் கலன் நீரினை 15 மில்லியன் கலன் கொண்டவேறொரு குழிக்குள் மாற்ற அதிகாரிகள் முயறசிமேற் கொண்டுள்ள போதிலும் அணைகளில்சிறுபாதிப்பு வந்தால் அதுவே 45 ஆயிரம் குடும்பங்களுக்கும் ஆபத்து என நீர்வள அதிகாரிகள் தெரிவித்ததனால் நீரைவெளியேற்றும் பணியில் ஈடுபட்ட அதிகாரிகள் நீரை வெளியேற்றவோ, அப்படியே விடவோ முடியாத இரண்டும் கெட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை மலையின் அடிவாரத்தில் உள்ள குடும்பங்களை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றும் பணியைத் தொடர்ந்தாலும் பல நூறு மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களை இழக்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# எரிமலை வெடிக்கும் அபாயம்

(லாகூஸ்)

நைஜீரியாவின் கமருன் மலைத தொடரின் எரிமலை வெடிக்கும் அபாயம் நிலவுவதாக அந்நாட்டு அரசாங்கம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இம்மலை இவ்வருடஇறுதிக்குள வெடிக்கலாம் என்றும் அதனால்இப்பகுதியில்வாழும் சகல மக்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் எனவும் அரசு எச்சரித்துள்ளது. (செ)

# மகனின் தலையை வெட்டிப் பூஜை செய்த பாசமுள்ள தந்தை

(சென்னை)

தந்தையொருவர் மகனின் தலையை வெட்டிப் பூஜை நடத்திய சம்பவம் சென்னையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி தந்தை பொருளாதார ரீதியில் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகி மன விரக்தியடைந்த நிலையிலேயே இவ்வாறு மகனின் தலையை வெட்டிப் பூஜை நடத்தியுள்ளார் என அவரது மனைவி பொலிஸாரிடம் கூறியுள்ளார். (செ)

# 5 வது உலக தமிழாசிரியர் மாநாடு

[சிங்கப்பூர்]

சிங்கப்பூர் தமிழாசிரியர் சங்கத்தின ஏற்பாடடில் ஐந்தாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு இன்றுதொடக்கம் 3 நாட்கள்வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டிற்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர்ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-5)

# மத்திய அமெரிக்காவில் கடும் வறட்சியினால் இறப்பு வீதம் அதிகரிப்பு

(வாஷிங்டன்)

மத்திய அமெரிக்காவில் நிலவும் கடும் வறட்சி காரணமாக இறப்போரின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்துள்ளது.

குவாட்ட மாலாவின் கிழக்குப் பகுதியில் கடும் பஞ்சம் நிலவுவதால் மக்கள் புல்பூண்டுகளைஉணவாக உட்கொள்கின்றனர்.

இது வரையில் 46 பேர் பட்டினியால் இறந்துள்ளனர்; மேலும்பலஇலட்சககணக்கானோர் உணவின்றி பட்டினியால் வாடுகின்றனர்.

இதேவேளை எல்சல்வடோரில் சுமார் 6 ஆயிரம் குழந்தைகள் போஷாக்கினறி அவதிப்படுகின்றனர்.

அத்துடன் நிக்கரகுவாவில் பயிர்கள் நாசமானதாலும், மழை பெய்யாத காரணத்தாலும் சுமார் 33 ஆயிரம் குடுமபங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மத்திய அமெரிக்காவில் வறட்சி காரணமாக பயிர் விளைச்சல் 8 சதவீதம்குறைந்துள்ளதாக உலக உணவுத் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. (செ)

# இந்தியக் கைதிகள் எவரும் பாக். சிறைகளில் இல்லை

## முஷாரப் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியக் கைதிகள் எவரும் பாகிஸ்தான் சிறையில் இல்லை என்று இந்திய அரசுக்கு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் பிரதமர் வாஜ்பாய்க்கும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கும் இடையில் இடம பெற்ற பேச்சு வார்த்தையில் இந்திய பிரஜா உரிமை பெற்ற எவராவது பாகிஸ்தானில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்று வாஜ்பாய் கேட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்த பாகிஸ்தான், மேற்கண்டவாறு தெரிவித்ததுடன் கைது செய்பவர்களை உடனுக்குடன் விசாரணை செய்து விடுதலை செய்கிறோம் எனவும் குறிப்பிட்டுள்ளது:

இதே வேளை 1971 ஆம் ஆண்டு முதல் இந்திய எல்லைப்படைவீரர், கடமையில் இருக்கும்போதே காணாமல் போயுள்ளனர் என இந்தியா தெரிவித்துள்ளது; (உ-7)

# பயணிகள் பேருந்தில் குண்டு வெடித்ததில் 16 பேர் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

கராச்சியில் நேற்றுக் காலை பயணிகள் பேருந்து ஒன்றில் குண்டு வெடித்ததில் பதினாறு பயணிகள் படுகாயமடைந்துள்ளனர் இதில் நால்வரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

சாரதி ஆசனத்திற்கு அடியிலேயேஇக்குண்டு பொருத்தி வைக்கப்பட்டிருந்ததாகவும் பஸ்புறப்பட்டு பதினைந்து நிமிடங்களின் பின்பே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கராச்சியின் தென்பகுதியில் சந்தைப்பகுதி ஒன்றில் குண்டு வீசப்பட்டதில் ஒருகுழந்தை உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர். (செ)

# காஷ்மீரில் மோதல் தீவிரவாதிகள் நால்வர்பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகரில் இந்தியப் படையினருக்கும் காஷ்மீர் தீவிர வாதிகளுக்கும் இடையில் திடீரென ஏற்பட்ட மோதலில் 4 தீவிர வாதிகள் பலியாகியுள்ளதாக இந்தியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீநகரின் வேறொரு பகுதியில் படையினர் மீது தீவிரவாதிகள் கைக்குண்டு வீசியுள்ள போதிலும் சேதம் ஏற்படவில்லை.

1989 ஆம் ஆண்டு காஷ்மீர் பிரிவினவாத அமைப்பினர் தமது போராட்டத்தினைத் தொடங்கியதிலிருந்து இதுவரை 30 ஆயிரம் பொதுமக்கள் பலியாகியுள்ளனர் எனத் தெரியவருகிறது; (உ-7)

# சாப்பாட்டுப் போட்டியின் போது தொண்டையில் இட்லி சிக்கி இளைஞர் பலி

[சென்னை]

சாப்பாட்டுப் போட்டியில் பங்கு கொண்டவர், தொண்டையில் இட்லி சிக்கியதால் பரிதாபகரமாக மரணமானார்;

கேரள மாநிலம் திருவனந்த புரம் அருகே உளள தென்மாறா என்னும் இடத்தில் ஒணம் பண்டிகையை ஒட்டி இடம்பெற்ற சாப்பாட்டுப் போட்டியில் பங்கு கொண்ட 23 வயது இளைஞரே இவ்வாறு மரணமானார். (உ)

பேதமை என்பதொன்று
யாதெனில் ஏதங்கொண்டு
ஊதியம் போகவிடல்:
- குறள்

# வலம்புரி

## அரசியலில் சோதிடம்!

இலங்கையின் அரசியலை வழிப்படுத்துவதில் அரசியல் யாப்பு விதிகளையும், சட்டங்களையும் விட சோதிடமே முன்னுரிமை பெற்றுள்ளது. எதற்கெடுத்தாலும் சோதிடத்தின்படியே ஜனநாயகக் கருமங்கள் நடைபெறுகிறது. ஜனாதிபதித் தேர்தல் முதல் பாராளுமன்றம் கூட்டுவது வரை சோதிடரின் சொற்படியே நடைபெறும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு வருடகாலத்திற்கு முன்னதாகவே நடத்தப்பட்டது. ஒருவருடம் பிந்தித் தேர்தல்நடத்தப்படுமாயின் சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக வரும் வாய்ப்பை இழக்கவேண்டிவரும் என்ற சோதிடர்களின் கணிப்பின்படி ஒருவருடம் முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது.

இது போன்று ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றை செப்ரெம்பர் 7 ஆம் திகதி கூட்டுவதாக இருந்த போதிலும், செப்ரெம்பர் 7 ஆம் திகதி அதாவது இன்று பாராளுமன்றத்தைக் கூட்டினால் கலகம் வெடித்து இரத்த ஆறு ஓடுமென பிரபல்யமான சிங்கள சோதிடர் ஒருவர் தெரிவித்திருந்தார். இதனால் பாராளுமன்றம் 6 ஆம் திகதி நேற்றே கூட்டப்பட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முடிவுகளையும், தீர்மானங்களையும் எடுப்பதில் கணிசமான பங்கை சோதிடம் கொண்டிருப்பது மறுக்கமுடியாத உண்மை.

மேற்குலக நாடுகளும் சோதிடங்களைப் பின்தொடர்ந்தாலும் இலங்கையின் அரசியலின்செயற்பாடுகளை சோதிடமே தீர்மானிக்கிறதெனலாம்.

சோதிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொன்றெனினும், தனியே தேர்தல் நடத்துவதற்கும், பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் மட்டும் சோதிடத்தைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் கொலை, சொத்தழிப்பு, இன அழிப்பு, பொருளாதாரத் தடைபோன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் அவற்றினால்ஏற்படக்கூடிய பாவ வினை குறித்தும் சோதிடம் கூறுகின்றது.

யுத்த விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீசுவது, மற்றும் பல்குழல் பீரங்கிகள் கொண்டு சிறுபான்மை இனத்தின் பிரதேசங்களை அழிப்பது இவையெல்லாம் சோதிடத்தில் பாவதோஷம் எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றையும் சோதிடர்கள் அரசுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

---

வெள்ளி நற்சிந்தனை

# காலத்தால் அழியாது சைவம் நிலைத்திருக்க

# நால்வர் அருளிய திருமுறைகளை நாடுவோம்

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள்
ஸ்ரீ சிவகுருநாதபீடம், யாழ்ப்பாணம்

தமிழர்தம்சமயநெறிஇறை வழிபாடு, காலத்தால் வரையறைசெய்யமுடியாத தொன்மையானது என்கிறார்கள் ஆய்வாளர்கள், சங்க நூல்கள் தரும் ஆதாரங்கள் சிந்தனைக்குரியன. இவைகளை ஆதாரமாகக் கொண்டு மறைமலையடிகளும், பேராசிரியர் கா.சு பிள்ளையும் வெளியிட்ட கருத்துக்கள் மீண்டும் சிந்திக்க வைக்கின்றன. இவற்றை ஆய்வாளர்களுக்கே விட்டுவிடுவோம்.

### இன்று எமது பிரச்சினை என்ன?

எல்லாச் சமயநெறிகளுக்கும் தலைமைப்பீடம் இருக்கின்றது. ஐயங்களும், நடைமுறைச் சிக்கல்களும் அங்கு தீர்வு காணப்படுகின்றன. சைவத்திற்கு அப்படி ஒரு அமைப்பு இல்லை. இதுவும் அவன் செயல்தானோ? கால, தேச, மொழி வரம்புகளைக் கடந்த நெறி சைவநெறி எனவே எத்தனையோ சிக்கல்களை அமைதியாக, அன்பால் வென்று எம்மை வாழ்விக்கும் நெறி, சைவநெறி நால்வர் காட்டும் அன்புநெறி, இன்று நால்வர் வழி நின்று சைவநெறி காட்டும் திருமுறைகள் மதிக்கப்படவில்லை என்பது உயிரையே தாக்கும் செய்தியாகும். சைவர்களுக்கு ஒரு தலைமை அமைப்பு நிறுவனம் இல்லை என்றேன்; ஏன் இல்லை?

தேவை இல்லை - எனவே இல்லை ........காரணம் அது எப்பவோ நிறுவப்பட்டுள்ளது? நாம் கண்டு கொள்ளவில்லை. வேதம் ஒருபாதை (வழி - தெரு) எத்தனையோ கிளைப்பாதைகள். இப்பாதையின் முடிவு சென்று சேர வேண்டிய துறை 'சைவத் துறை' இத் 'துறைநின்று', தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று சைவக் குரல்தருகிறார் மணிவாசகர்: 'மூலப் பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி' தென்னாட்டவர் தமிழ் வழி, சிவனைக் கண்டவர்கள்.

### ஆரியமும் தமிழும்

சிவமயமான தென்னாட்டவர்க்கு 'ஆரியமும் செந்தமிழும்' ஆகியவன் சிவன்; ஒன்றை ஒன்று 'அமுக்குவதை' என்றும் சைவத் தமிழன் பொறுக்கமாட்டான். 'முப்போதும் திருமேனி தீண்டும்' பாக்கியம் பெற்றவர்கள் அந்தணர்கள் இப்பாக்கியம் பெற்றவர்களை வணங்குவதும் வாழ்த்துவதும் எங்கள் மரபு. இந்த மரபை மீள் பரிசீலனை செய்ய இடந்தரக் கூடாது என்பது எமது ஆதங்கம்.

அபசாரம் செய்து விட்டதாக ஏங்கி நின்ற 'சுந்தரரை' உபசாரம் செய், தமிழில் என்றுதான் கேட்டான்; திருவெண்ணை நல்லூரான் என்கிறார் சேக்கிழார் பெருமான். '...... நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் எம்மைச் சொற்றமிழ்பாடு என்றார்' 'தூமறைபாடும்வாயார்'. இத்தகைய திருமுறைகள் ஓதுவதைக் குறைத்து வருகின்றனர் இன்றைய சைவத் தமிழ் மக்கள். வெறும் சடங்குச் சமயமாயிற்றோ எமது சமயம் என்று அஞ்சவைக்கிறது இது.

அப்பர் சுவாமிகளின் திருமறைக்காட்டுத் திருப்பதிகத்தையும், அத்திருப்பாடல்களின் உள்ளார்ந்த செம்பொருளையும் ஊன்றி நினைக்கும் போது ஒன்று தோன்றுகின்றது.

'வேதங்களால்' பூட்டப்பட்டது திருக்கதவம். 'வேதங்களுக்கு' மதிப்பளித்து மக்கள் கூட்டம் வேறுவழி செய்து திருக்கோவில் புகுந்தது. வந்தது ஒரு சைவத்தமிழ் அந்தணக் குழந்தை. கூடவந்தது ஒரு சைவத் தமிழ்க் கிழவர் – அப்பர். வேதங்களால்பூட்டப்பட்ட திருக்கதவம் என்கிறார்கள் அந்தணர்கள்.

அப்படியா? அப்பரே திறக்கப்பாடும் "தமிழால்" என்றது அந்தணக் குழந்தை.

குழந்தையின் அன்புக் கட்டளையை ஈசன் கட்டளையாக ஏற்றுப் பாடினார் அப்பர்.......

'...... இரக்கம் ஒன்றிலீர் எம்பெருமானிரே ........ சரக்க விக்கத வந்திறப் பிம்மினே' இது அப்பர். வேதாரணிஸ்வரருக்கு விட்ட கட்டளை.



### வல்ல தமிழ்

கட்டளையை ஈசன் கேட்டதும், செயற்பட்டதும் 'முதலை உண்ட பாலனைக் கொணர்ந்ததும்' 'என்பு பெண் உருவாய்க் கண்டதும்' 'திருக்கதவம் திறந்ததும்' தண்டமிழ்ச் சொற்களாலேயோ? பிறமொழிச் சொற்களாலோ சாற்றீர் என்று முன்பே கேட்டுவிட்டார்கள்.

எனவே, பெருமக்களே! 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலர் திருவாக்கைச் சிந்தை செய்வோம். ஆவன செய்வோம்; நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்.

இங்கும் ஒரு 'பெரியார்' தோன்றித்தான் ஆக வேண்டுமா?

'முத்தமிழால் வைதாரையும் இங்கு வாழவைத்தோன்' எம் இறைவன்.

---

## புறக்கணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து

# தேசிய விளையாட்டு விழாவை

# திருமலை வி.அணி பகிஷ்கரிக்கும்

(திருகோணமலை)

குருநாகல் மாவட்டத்தில் எதிர்வரும்11ஆம்திகதி முதல் 15 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ள 27வது தேசிய விளையாட்டு விழாவை பகிஷ்கரிப்பதென திருகோணமலை மாவட்ட மெய்வல்லுநர் அணியினர் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வருடம் இடம் பெற்றமெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றி சாதனையுடன் வெற்றியீட்டிய வீரர்களுக்கு ஓட்டப் போட்டியின் போது அணியும் பாதணி, பயிற்சி உடைகள் என்பனவற்றை வழங்காமை,

மற்றும் கடந்த வருடம் இடம்பெற்ற போட்டிகளில் சாதனைபடைத்தவீரகளுக்கு வழங்குவதெனஉறுதியளித்த விளையாட்டுத்துறை உபகரணங்களை வழங்காமை,

திருமலை மாவட்ட வீரர்கள் புரிந்த சாதனைகளை சான்றிதழ்களில் குறிப்பிடாமை ஆகியவற்றைக் கண்டித்து இவ்வருடதேசியமட்ட விளையாட்டுவிழாவை பகிஷ்கரிப்பதென அவர்கள் முடிவு செய்துள்ளனர். (உ)

## மூவர் கைது

(கண்டி)

ரந்தெனிகல நீர்த்தேக்க அணைக்கட்டைப் படம் பிடித்த சிங்கள யுவதி உட்பட மூன்று மலையக இளைஞர்களை ஹசலங்க பொலிஸார் சந்தேகத்தின் பேரில்கைது செய்துள்ளனர். (உ)

## எழுத்தறிவு தினம்

(கல்வயல்)

எழுத்தறிவு தினம் நாளை உலகம் பூராகவும் கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி எழுத்தறிவு இல்லாமையால் எதிர் நோக்கும் இடர்கள்பற்றி ஆய்வுப் பட்டறைகள் சொற்பொழிவுகள், போட்டிகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. உ-111)

பட்டப்பகலில்

## திருட்டு

[கல்வயல்]

பருத்தித்துறை பொற்கொல்லர் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் பட்டப் பகலில் கள்வர்தம் கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

மருத்துவ மாதுவாக கடமையாற்றும் வீட்டின் எஜமானி முன்பக்கமாக நின்ற வேளை பின்புறத்தால் வீட்டினுள் நுழைந்து திருடர் அங்கிருந்த தங்க நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

[உ]

## கலந்து உரையாடல்

(புலோலி)

தென்மராட்சி சுகாதாரத் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மேற்படி தொண்டர்களின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து சுகாதாரத் தொண்டர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு தொண்டர் சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (உ-52)

## பயிற்சிக் கருத்தரங்கு

(புலோலி)

கரவெட்டி, பருத்தித்துறை மருதங்கேணி, பிரதேசங்களுக்குட்பட்ட கால்நடை பண்ணையாளர்களின்நன்மை கருதி பருத்தித்துறை வைத்தியஅலுவலகம், பண்ணையாளர்களுக்கான இலவச பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக மாடுவளர்ப்பு பற்றிய இலவச பயிறசிக்கருத்தரங்கு இம்மாதம் 15ல்திகதி கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் பருத்தித்துறை கால்நடைவைத்தியஅதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி .சிவ.வசீகரன் அறிவித்துள்ளார்.

பயிற்சிக் கருத்தரங்கில் 20 பண்ணையாளர்கள் மட்டுமேபங்குபெறமுடியும்: பருத்தித்துறை மருதங்கேணி பிரதேசங்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-52)

---

## தினசரி தியானம்

## காந்த ஊசி

காந்தம் இரும்பைக்
கவர்ந்திழுத்தா லென்ன அருள்
வேந்தன் எமை இழுத்து
மேவுவனோ பைங்கிளியே
-தாயுமானவர்-

காந்தத்தைச் சேரும் இரும்பு தானே காந்தமாவது போன்று கருணாகரனே, உன்னில் நான் கலப்பேனாக.

கப்பலானது காற்றால் அலைக் கழிக்கப்படும் பொழுதும் அக் கப்பலில் இருக்கும் காந்தவூசி வட திசையையே காட்டி நிற்கிறது. வாழ்விலே மனிதனுக்கு வரும் இன்னல்களுக்கிடையில் அவனுடை மனது என்னும் காந்தவூசி கடவுள் என்னும் குறியையே நாடியிருக்க வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# பரபரப்புடன் எதிர்பார்த்த
# பாராளுமன்றம் நேற்றுக் கூடியது
## சலசலப்பு ஏதுவுமில்லை

[கொழும்பு]

இரண்டுமாதகால இடைவெளிக்குப்பின் நேற்றுக் காலை 10மணிக்கு பாராளுமன்றம் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்கா தலைமையில் கூடியது;

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் விசேடபிரகடனம் ஒன்றின் மூலம் பாராளுமன்ற அமர்வு கடந்தயூலைமாதம் ஒத்திவைக்கப்பட்டது.

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசும்-ஜே.வி.பியும் கூட்டுச்சேர்ந்தபின் பெரும்பான்மைப் பலத்துடன் நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அறிவிப்பின் பிரகாரம்இன்று கூடவேண்டிய பாராளுமன்றம் நேற்றுக்காலை கூடியதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாராளுமன்றக் கூட்டத்தின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஆர்.யோகராஜன் எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்:

பாராளுமன்றம் மீண்டும் இன்று கூடியபின்னர்மீண்டும் இம்மாதம் 18ம்திகதிவரை ஒத்திவைக்கப்படும்; [வ]

### உடன்படிக்கை..

சுமத்தினர்;

இச்சமயத்தில் செய்தியாளர்கள், ஜே.வி.பியின் மகாநாட்டில் ''தகுதிகாண்'' என்ற பதம் அவர்களினால் உச்சரிக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டிக் கேட்டபோது; இந்த ஒப்பந்தத்தில் தகுதிகாண் அரசு என்ற வார்த்தைப்பிரயோகம் இடம் பெறவில்லை என்பதுதான் உண்மை என்றும், ஜே வி.பியினர் தெரிவித்தமைபற்றித் தமக்கு எதுவும் தெரியாதென்றும் பதிலளித்தனர்,

மங்களசமரவீர வின் கருத்துத் தொடர்பாக ஜே:வி.பி எம்பி நந்தன குணதிலகாவுடன் தொடர்புகொண்டு எமதுசெய்தியாளர் கேட்டபோது இந்தஅரசு கடந்த காலங்களில் பலதவறுகளைப் புரிந்துள்ளது இதன்காரணமாகவே திகதி,மாதம் குறிப்பிட்டு ஒருஒழுங்கு முறையில் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தில்த குதிகாண்அரசுபற்றிஎதுவும் குறிப்பிடாமல் விட்டாலும் இக்காலப் பகுதி அரசுக்கு ஒரு தகுதிகாண் காலம்தான் என்றுதெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் உரையாற்றும் போது தகுதிகாண் அரசு என்று விழித்துப் பேசியுள்ளார்கள் என்றும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை புலிகளுடன் பேசுவது தொடர்பாக மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்களுக்கும் ஜே.வி.பி எம்.பி நந்தனகுணதிலகமாறுபட்ட கருத்தையே சுட்டிக் காட்டியதுடன் இனப் பிரச்சினை தொடர்பாக அரசு விடுதலைப்புலிகளுடன் பேசுமாக இருந்தால் அதனை ஜே.வி.பி அவதானிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்,

பொதுத்தேர்தல் தொடர்பாக அமைச்சர் மங்களசமரவீர பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்த கருத்துக்களையும் நந்தன குணதிலக மறுத்துரைத்ததுடன் தகுதிகாண் அரசின் பதவிக் காலமான ஒரு வருடம் முடிவடைந்த பின்னரே பொதுத் தேர்தல் நடத்தலாம் என ஒப்பந்தம் தெளிவாகக் கூறுயதாகவும் தகுதிகாண் அரசாங்கத்தின் பதவிக் காலம் எக்காரணம் கொண்டும் ஒரு வருடகாலத்திற்கு மேல்நீடிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்றையபத்திரிகையாளர்மாநாடு எழுப்பியுள்ள கருத்து முரண்பாடுகள் புதிய அமைச்சரவை அமைக்கப்படும் தினமான 11ம்திகதிக்கும் 24ம் திகதிக்குமிடையில் அரசின் ஸ்திரத்தன்மையால் மீண்டும் பாரிய உடைவு ஏற்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்; (வ)

### யாழ் சிறையில் கடமையாற்ற ஏழு பேர் வருகை

[யாழ்ப்பாணம்]

யாழ். சிறைச் சாலைல் கடமையாற்ற தென்னிலங்கையில்இருந்து பெரும்பான்மையினத்தைச்சேர்ந்தசிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வந்துள்ளதாக யாழ் சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்; சிவசுந்தரம் தெரிவித்துள்ளார்;

ஒப்பந்த அடிப்படையில் மூன்று மாதகாலம் கடமையாற்றவுள்ள ஏழு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்துவந்துள்ளனர். (வ)

### ஒப்பந்தத்...

மூன்றுமாதத்திற்குள் அமைக்கப்பட வேண்டியதன் தேவையை தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்: (ந-4)

### பொ.ஐ.ஐ ..

துள்ளார்.

நேற்று பாராளுமன்றக் கூட்டத் தொடரில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு ஏளனம் செய்துள்ளார்;

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்கம் தற்போது ஜே: வி .பியின் கைதிளனவும் 1988, 89 ஆண்டுகளில் ஜே.வி.பி மக்களைக் கொன்று குவித்ததை அரசாங்கம் மறந்துவிடக் கூடாது என்றும் கூறினார்;

இதற்கு பதிலளித்துப்பேசிய ஜே. வி. பியின் பிரசாரசெயலாளர் விமல் வீரன்ச பொது ஜன ஐக்கிய முன்னணிஅரசை ஜே; வி. பி கட்டுப்படுத்தவில்லை. அரசு கேட்டுக்கொண்டதற்கமையவேஉடன்படிக்கையில் ஜே. வி. பி கைச்சாத் திட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் கூற்று அக்கட்சியின் ஆற்றாமையை காட்டுவதாக உள்ளதென்றும் கூறினார். (ந- 4)

### ஜே.வி.பி

லாப் பிரேரணையிலும் கையொப்பமிட்டிருந்தனர்;

இந்நிலையில் அடுத்தவாரமளவில் கூடவுள்ள தமிழ்க் கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசு ஜே வி.பி உறவு தொடர்பாக ஆராயவுள்ளதாக தெரிய வருகிறது (வ)

### அமைச்சரவை...

களுடன் ஜனாதிபதி பேசிவருகிறார்;

அமைச்சரவையின் இறுதிக் கூட்டம் 12ம்திகதி நடைபெறவுள்ளதாகவும் இதற்குமுன்னதாக புதிய அமைச்சர்களின் விபரம் வெளியீடப்படும் என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [வ]

### விமானத்தளத்...

றும் கொடுப்பனவுகளைஎதிர்பார்க்க கூடாதெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி முதன் முறையாக விமானப் படையினர் மீது சுமத்தியகுற்றச்சாட்டு விமானப்படையின் உயர் மட்டத்தில் பெரும்சர்ச்சையைக் கிளப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

### அறிக்கை கையளிப்பு

(கொழும்பு]

ஜூலை 24 ஆம் திகதி நடைபெற்ற க-டுநாயக்க விமானப்படைத்தளம் மீதான தாக்குதல் பற்றி விசாரித்த 3 உறுப்பினர் குழுதனது அறிக்கையை ஏயார் மார்ஷல் ஜயலத் வீரக் கொடியிடம் கையளித்துள்ளது;

விமானப்படை த்தளபதி வீரக்கொடி அதனை பார்வையிட்ட பின்னர் பாதுகாப்புச் செயலாளரிடம் அது கையளிக்கப்படுமென விமானப்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்; (ந)

### ஜே.வி.பி யுட--

சாங்கம்' என்ற சொற்பதம் இடம்பெறவில்லை. நாம் செய்துகொண்டது புரிந்துணர்வு ஒப்பந்தமே தவிர வேறொன்றும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இவ்வொப்பந்தம் எந்த வகையிலும் நோர்வேயின் சமாதான முயற்சியை பாதிக்காதென்றும் தெரிவித்துள்ளார். (வ)

### மட்டுவிலில் மண்டை ஓடு

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு சந்திரபுரம்பகுதியில் மனிதமண்டை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது ; மீளக் குடியமர்வதற்காக அப்பகுதிக்குச் சென்றபொதுமக்கள்மண்டை ஓட்டை கண்டெடுத்துள்ளனர்.

மண்டை ஓடு கிடந்தஇடத்தில் உடம்பின் ஏனையபாகங்கள் எதுவும் காணப்படாமை மக்கள் மத்தியில்சந்தேகத்தை எழுப்பியுள்ளது; (ந-5-10)

### எட்டு எம். பி.கள் கலந்து கொள்வர்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய நாட்டில் நடைபெறவுள்ள பொது நலவாய அமைப்புக்களின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் எட்டுபாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்;

இன்றுசெல்லவுள்ள இக்குழுவில் அரச தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வரும் எதிர்த் தரப்புபாராளுமன்ற உறுப்பினர் நால்வரும அடங்குவர் ;

இக்குழுவிற்கு இனவிவகார தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் எஸ். கணேசமூர்த்தி தலைமை தாங்கிச் செல்வார். (ந-4)


### ★ ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள் ★

எதிர்வரும் ஞாயிறு ஆரம்பமாகி தொடராக மாதத்தில் முதல் ஞாயிறும் இறுதி ஞாயிறும் 'வலம்புரி' யில் வெளிவருகிறது. தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற

'ஸ்ரீ வாணி நகை மாடத்தினர்'

வழங்கும் பரிசில்களை அள்ளித்தரும் ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்.

கேள்விகளுக்கான சரியான விடையை எழுதி அனுப்பும் அதிர்ஷ்டசாலிகள் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 200.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 150-00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 100-00 |

சரியான விடையை எழுதி கேள்விகளுடன் கூடிய கூப்பனை இணைத்து அனுப்பவேண்டிய முகவரி:

ஸ்ரீ வாணியின் ஏழு கேள்விகள்
ஸ்ரீ வாணி நகை மாடம்
173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-2470)



### பிரதேச செய்தியாளர் தேவை

வலம்புரிப் பத்திரிகைக்கு பின்வரும் பிரதேசங்களுக்குச் செய்தியாளர்கள் தேவை;

தகுதி: க. பொ. த; உயர்தரத்தில் மூன்று பாடம் சித்தி;

பிரதேசங்கள்

கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, கோண்டாவில், உரும்பிராய், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பண்டத்தரிப்பு, மாதகல், அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர், சங்கானை, நவாலி, நயினாதீவு, வேலணை;

விண்ணப்பங்கள் யாவும்

ஆளணி முகாமையாளர்
''வலம் புரி''
இல 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13-09-2001 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்!

குறிப்பு:- விண்ணப்பக் கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் 'பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனத் தவறாது குறிப்பிடவும்.

- நிர்வாகம்



★ மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு ★

## நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, [கி/2212] யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.